<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**</u>
<u>**அசல் வழக்கு எண். 108/2018**</u>
<u>**நாள் 02/08/2024, வெள்ளிக்கிழமை**</u>

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - சாந்தி | க/பெயர் - ராஜா |
| வயது - 51 | தொழில் - |
| விலாசம் - எண் 16, 3வது குறுக்கு தெரு, டி.டி.தோட்டம், பெரம்பூர், சென்னை -11. | |

<u>**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை (DW1) -**</u>

இந்த வழக்கு யார் யார் மீது தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் டில்லியம்மாள் மீது நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். டில்லியம்மாளும், அவருடைய மகனும், மகளும் என் மீதும் என் தாயார் மற்றும் என் சகோதரிகள் மீதும் வழக்கு தொடர்ந்துள்ளனர் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் 255. அதன் விஸ்தீரணம் 13 1/2 செண்ட். நான் திருமணம் ஆகி பெரம்பூரில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். எனக்கு 18 வயதில் திருமணம் நடந்தது. தாவா சொத்து பெருங்காவூர் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். வாதிகளை தெரியும் அவர்கள் அந்த ஊரில் இருந்து வருகிறார்கள். மூன்றாம் வாதி வசந்தகுமாருக்கு 30 வயதிற்கு மேல் இருக்கும் என்றால் 30 வயது இருக்கும். திருமணம் ஆவதற்கு முன்பு வரை நான் பெருங்காவூர் கிராமத்தில் தான் வசித்து வந்தேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கும் நானும் எனது பெற்றோர்கள் இருந்து வசித்து வந்த இடத்திற்கும் 100 மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். மூன்றாம் வாதி வசந்தகுமார் என்பவர் வழக்கு சொத்தில் தான் பிறந்தார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எனது தாயார்

என்றால் சரிதான். 3 முதல் 5 வரை உள்ள பிரதிவாதிகள் எனது சகோதரிகள் என்றால் சரிதான். எனது அப்பா முனுசாமி எந்த வருடம் இறந்தார் என்றால் 2007ல் இறந்தார். முதல் வாதியின் கணவர் சண்முகம் 2004ம் வருடம் இறந்தார் என்றால் சரிதான். வாதிகள் எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சொத்திற்காக தாக்கல் செய்துள்ளனர். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து பார்த்து தான் கையொப்பம் போட்டேனா என்றால் எனக்கு படிக்க தெரியாது. அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது வழக்கறிஞர் படித்து சொல்லுவார்.

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**